முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வசிஷ்டமகரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.10.2018, செவ்வாய்க்கிழமை

1. **குமரகிரி கண்ட குருராசனே**
   **குறைகள் போக்கி கலியுகத்தில்**
   **அமரனாக ஆறுமுக சக்தி கொண்டு**
   **அழியாமை அருளும் தேசிகனே**
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
   ஆசிபட **விளம்பி துலை திங்கள்**
   **அறிவிப்பேன் முன்னான்கோர் திகதி குசன் வாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 13ம் நாள் 30.10.2018, செவ்வாய்க்கிழமை)**
3. **வாரமதில் வசிஷ்டமகரிஷி யானும்**
   வழங்கிடுவேன் உலகோர் நலமுற
   சோரம் போகா நல்லுலகம் தனை
   சுத்தநெறி கொண்டு அரங்க ஞானி
4. அரங்க ஞானி அமைத்து வருக
   அவசியம் உலக மக்கள்
   அரங்க ஞானி அருள் தடம்
   ஆறுமுகன் ஏழாம் படை வீட்டை
5. படை வீட்டை அணுகி வருக
   பணிந்து வணங்கி தருமம்
   தடைபடா உதவி வருதலுற
   தவராசனிடம் உயர் தீட்சைகளை
6. தீட்சைகளை திங்கள் தோறுமாக
   தொடர்ந்து மக்கள் ஏற்று நன்கு
   தீட்சை விதி மாறா நடந்து
   தேசிகனார் சீடர்களாகி தொடர
7. தொடர்ந்து அன்னதான சேவையை
   தேசமெங்கிலும் பரப்பி வருக
   இடரென்று ஏதும் அணுகாத
   ஏற்றமான சூழல்கள் உருவாகி
8. ஆகியே கலியுகம் மாறும்
   அவசியம் மக்களிடை சமத்துவ
   அகிலமெங்கும் சுத்தநெறி வழி
   அற்புதம் நடந்தேறக் கூடும்
9. கூடாத எதிர்மறை சக்திகள்
   குமரன் ஆறுமுகன் ஆளுமை பரவும்
   நாடெங்கிலும் இல்லா விலகியே
   ஞானநிலை கருணைமிக்க தயவு நிலை

10. நிலை பெருகி கலியுக மக்கள்
நிலைத்தன்மைதனை அடைவர்
பிழையற மக்கள் ஞானவழி
பெருஞ்சக்தி அரங்கன் மூலம் பெற்று

11. பெற்றுமே கலியுகம் தானும்
பேராசான் தலைமை தன்னில்
ஆற்றல்மிக்க ஞானயுகமாகும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வசிஷ்டமகரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கொல்லிமலைச் சாரலில் குமரகிரி எனும் தலம் கொண்ட குருராசனே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே மக்களின் குறைகளை போக்கி இக்கலியுகத்தினில் மரணமிலாப் பெருவாழ்வை அடைந்து முருகப்பெருமானின் சக்தியை முழுமையாக பெற்று மக்களுக்கும் மரணமிலாப் பெருவாழ்வை அருளுகின்ற ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே! அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 13ம் நாள் 30.10.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வசிஷ்டமகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வசிஷ்டமகரிஷி.

வீண் போகாத நல்லுலகை குற்றமற்ற நேர்மையான உலகினை சுத்தநெறி கொண்டு ஆறுமுக அரங்கமகா ஞானி அமைத்து வருகின்றார். ஆதலினால் அவசியம் உலக மக்களெல்லாம் அரங்கனின் அருட்சபைக்கு ஆறுமுகனார் அருளிய ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி ஆங்கே முருகப்பெருமானின் அவதாரமாக வீற்றிருக்கும் அரங்கமகா தேசிகனார் திருவடிகளிலே பயபக்தியுடன் பணிந்து வணங்கி அரங்கன் உலக நலம் கருதி செய்கின்ற தானதரும அறப்பணிகளிலே தவறாமல் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் வர வேண்டும். அரங்கனிடத்து உயர்வான தீட்சை உபதேசங்களை அடைந்திட வேண்டும்.

ஆறுமுக அரங்கரிடத்து மாதந்தோறும் தவறாமல் தீட்சை உபதேசம் பெற்று அரங்க ஞானி உபதேசத்தை கேட்டு அதன்படி நடந்து வருவதுடன் தீட்சை விதி மாறாது நடந்து அரங்கனின் அன்பிற்கு பாத்திரமாகி அரங்கனின் சீடர்களாக ஆகி அரங்கமகானை ஞானவழி பின்தொடர்ந்து வருவதுடன் அரங்கன் உலக நலனிற்காக ஆற்றும் ஞானமளிக்கவல்ல தர்மமாம் அன்னதான தர்மங்களை நாடெங்கிலும் பரப்பி நாடெங்கும் தர்மங்கள் நடந்திட வழிவகை செய்து வர வேண்டும்.

நாடெங்கிலும் அன்னதானம் நடந்திட நடந்திட நாட்டின் தர்மபலம் பெருகி இடர்கள் ஏதும் அணுகாத அற்புதமான சூழல்கள் உருவாகி துன்பம்மிக்க கலியுகமும் தர்மஉலகமாக மாறிடும். தர்மபலம் பெருகிட சுத்தநெறி நாடெங்கும் பரவி மக்கள் கடைப்பிடித்திட உலகமெங்கும் அரங்கனின் சுத்தநெறியின் மூலமாய் மக்களிடையே ஒற்றுமை உருவாகி சமத்துவம் பெருகி அற்புதமான ஒற்றுமையுள்ள உலகமாக இவ்வுலகம் மாறிடும்.

சற்றும் நன்மையே தராத எதிர்மறையான முரண்பட்ட செயல்களெல்லாம் முருகப்பெருமானின் ஆட்சி உலகினில் பரவபரவ ஒழிந்து விலகிடும். தீவிரவாத செயல் எல்லாம் முருகப்பெருமானின் ஆட்சி உலகினில் பரவபரவ ஒழிந்து விலகிடும். தீவிரவாத செயலெல்லாம் உலகை விட்டு நீங்கி நாடெங்கிலும் ஞானநிலை பெருகி கருணைமிக்க தயவுநிலை பெருகி கலியுக மக்கள் மாறா நிலைத்தன்மைதனை அடைந்து சிறப்படைவார்கள். தவறுகள் அற்ற நன்மக்களாக ஆகி ஞானவழிதனில் சென்று ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக பெரும் சக்திகளைப் பெற்று கலியுகம் உலகப்பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தலைமையில் ஆற்றல்மிக்க ஞானயுகமாக ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வசிஷ்டமகரிஷி.

–சுபம்–